மாலைமணி

ஆசிரியர் : பி.எஸ்.இளங்கோ

Anand

V.K. PICHAI KARUR NEWS AGENT

விலை 16 காசு, 18·9·60

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 18—9—60 ஒலி 46

காங்கிரஸ் ராஜ்யமா ? காலிகள் ராஜ்யமா ?

★

நாடெங்கிலும், நாள் தவறாமல் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் காலிகளால் தாக்கப்பட்டு வருகிறார்கள்! கொஞ்சமும் அச்சப்படாமல் வீடு நுழைகிறார்கள்! விடுதலை வீரர்களைத் தாக்குகிறார்கள்! கொடிகளைக் கிழிக்கிறார்கள், நம் தலைவர்களின் படங்களை உடைக்கிறார்கள்! நாட்டிலே வாழ முடியவில்லை! நாட்டிலே ஆட்சி நடக்கிறதா என்பதும் தெரியவில்லை!

சென்னையிலே ஆரம்பிக்கப்பட்ட இந்தக் காலித்தனங்கள், இந்த இழி செயல்கள், இந்த ஈனச் செயல்கள் வெளியூர்களிலும் பரவி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன!

கோவையிலே ஆரோக்கியசாமி கொல்லப்பட்டார்; குடந்தையிலே இராமலிங்கம் கொல்லப்பட்டார்! குன்றத்தூரிலே சம்பந்தம் தாககப்பட்டார், சிந்தாதிரிப்பேட்டையிலே, சூளையிலே, பெரம்பூரிலே பல தோழர்கள் தாக்கப்பட்டனர்.

காடுப்பட்டியிலுள்ள நமது இயக்கத்தோழர் திராவிடமணியின் மனைவியார் காமாட்சி அம்மையாரின் மண்டையை உலக்கையால் பிளந்து படுகாயப்படுத்தி இருக்கிறார்கள்! இன்னும் எத்தனையோ ஊர்களிலிருந்து இது போன்ற சம்பவங்கள் நடைபெற்றிருப்பதாகச் செய்தி வந்துகொண்டே இருக்கிறது!

இதற்கெல்லாம் என்ன காரணம்? யார் பொறுப்பாளி? காலிகள், ரௌடிகள், குண்டர்கள் கழகத் தோழர்களைத் தாககக் காரணம என்ன? காலிகளுக்கும் எங்களுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? அவர்களுக்கும் எங்களுக்கும் என்ன உறவு இருக்கிறது? காலிகளுக்கும் எங்களுக்கும்தான் என்ன பகைமை இருக்கிறது? என்ன குரோதமிருக்கிறது? அவர்கள் ஏன் எங்களைத் தாக்க வேண்டும்?

வறுமைப் பிணியை பயன்படுத்திக் கொண்டு காங்கிரஸ்காரர்கள் இந்தத் திருவிளையாடலில் இறங்கி இருக்கிறார்கள் போலும்! கூலிப்படையை நம்பி, உணர்ச்சிப் படையை, எழுச்சிப் படையை, விடுதலைப் படையை அழித்து ஒழித்து விடலாம் என்று கனவு காணவேண்டாம்! அது பாலைவனத்தில் காணும் கானல் நீராகும்!

மக்கள் சக்தியை இழந்துவிட்ட காங்கிரஸ், தேர்தல் நெருங்க, நெருங்க குண்டர்கள் படையைத் திரட்டி நம்மிடம் சண்டமாருதம் செய்ய அனுப்புகிறார்கள்! குண்டர் படையினால் ஓட்டுகளைத் திரட்டி மாட்டுப் பெட்டிகளை நிரப்பிவிட முடியுமா? அல்லது மக்களின் செல்வாக்கைத்தான் திரட்டமுடியுமா?

விடுதலைப் பெற்று பதின் மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிறது! இதுவரை சாதித்த பட்டியல்களை, நாட்டிற்குச் செய்த நன்மைகளை மக்களிடம் எடுத்துச்சொல்லி ஓட்டுகளைப் பெற்று, ஆட்சி பீடத்தில் அமர யோக்கியதை இல்லையா? ரௌடிகளின் கையில்தான் உங்கள் அரசியல் வாழ்வு இருக்கிறதா? அந்தத் தடித்தனம் பிடித்த ரத்த வெறியர்களின் உதவி உங்களை நிச்சயம் காப்பாற்றாது!

மக்களைக் காப்பாற்றுங்கள், மக்களை வாழவையுங்கள், மக்களுக்குச் சோறு போடுங்கள், மக்களை வறுமையிலிருந்து மீட்டுத் தாருங்கள், மக்களின் உணர்ச்சிக்கு மதிப்பளியுங்கள், மக்களின் எழுச்சிக்குப்பரிவு காட்டுங்கள்—அவர்கள் உங்களைக் காப்பாற்றுவார்கள்! ரௌடிகளை நம்பவேண்டாம்!

குண்டர்களை வளர்ப்பதால். ரௌடிகளை ஆதரிப்பதால், காலிகளுக்கு ஊக்க மூட்டுவதால் எங்களுக்கு ஏதும் நட்டமில்லை! அது உங்களுக்குத்தான் பெரும் நட்டமாகும்! அது உங்களுக்குத்தான் மாபெரும் ஆபத்தாகும்!

நாட்டிலே நடைபெறும் காலித்தனங்களை போலீஸ் அதிகாரிகளால் அடக்க முடியவில்லை! போலீஸ் அதிகாரிகளால் அடகக முடியவில்லை என்று சொன்னால் அவாகளுக்கு ஆற்றல் இல்லை, திறமை இல்லை என்று பொருளல்ல! சென்னை போலீஸ் மிகத் திறமையான போலீஸ்! அவர்களுக்குள்ள ஆற்றலும், திறமையும் வேறு எந்த மாநிலத்திலுமே கிடையாது!

இங்குள்ள போலீஸ் அதிகாரிகளுக்கு ஆற்றலிருக்கிறது. ஆனால், அதிகாரமில்லை! அச்சப்படுகிறார்கள், "வேலை போய் விடுமோ" என்று பயப்படுகிறார்கள்! அஸ்சாம் பயமுறுத்தலைக் கண்ட பின்பும் போலீஸ் அதிகாரிகள் துணிந்து பணியாற்ற முடியுமா?

போலீஸ்காரர்களின் கையில் துப்பாக்கி இருக்கிறதே தவிர - அதனுடைய வில், அதனுடைய பித்தான் காங்கிரஸ்காரர்களின் கட்டை விரலால்தான் அது பிடிக்கப்பட்டிருக்கிறது! காங்கிரஸ்காரர்களின் கட்டைவிரல் அந்தப் பித்தானை எப்போது அமுக்கி விடுகிறதோ, எந்த நேரத்தில் அமுக்கி விடுகிறதோ, எந்தக் கூட்டத்தின்மீது அமுக்கி விடுகிறதோ அப்போதுதான் அது வெடிக்கும்; பிணங்களைக் குவிக்கும்!

இந்த நிலை நீடிக்குமானால் நாட்டிலே அமைதி நிலவுமா? கொந்தளிப்பு அடங்குமா?

கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகளை கடைபிடித்து வரும் படைகளோடு மோதுவதால நாட்டிலே விபரீதம் ஏதும் நடைபெறவில்லை! உங்களைப் போன்றவர்களோடு மோதினால், உங்களைப் போன்ற ரௌடிக் கூட்டங்களோடு மோதினால் சென்னையும அஸ்சாம் பட்டத்தைப் பெற்றிருக்குமே! நாட்டிலே ரததக கிளறி ஏற்பட்டிருக்குமே! இந்த நாகரீக உலகத்திலும் அந்த அநாகரீகச் செயல் நடைபெறலாமா?

காந்தியாரின் வழி வந்தவர்களுக்கு இது ஆகாது, தகாது!

ஜனநாயகம் பேசுபவர்களுக்கு இது முறையல்ல, இது நெறியல்ல!

நாட்டைப்பற்றி கவனிக்காவிட்டாலும், நாட்டின் அமைதியைப்பற்றி கவனிக்காவிட்டாலும், காந்தியாரைப்பற்றி எண்ணிப் பார்க்காவிட்டாலும் கொஞ்சம் உலகத்தைப் பற்றியாவது கவலைப்படுங்கள்!

இந்த நிலை நீடித்தால் உலகம் சிரிக்கும், ஊர் கை கொட்டி நகைக்கும்! நாட்டிலே நடப்பது காங்கிரஸ் ராஜ்யமல்ல, காலிகள் ராஜ்ஜியம், ரௌடிகளின் ராஜ்ஜியம், குண்டர்களின் ராஜ்ஜியம் என்ற அவச் சொல வரும்! அந்த அவச் சொல தமிழகத்திற்கு வேண்டாம்! வேண்டவே வேண்டாம்! ★

பாரதியின் போலிப் பக்தர்களுக்கு:

" உண்மையின் பேர் தெய்வம் என்போம்—அன்றி
ஓதிடும் தெய்வங்கள் பொய்யெனக் கண்டோம்
உண்மைகள் வேதங்கள் என்போம்—பிறிது
உள்ள மறைகள் கதையெனக் கண்டோம்."

— பாரதியார்.

நாம் பெரும் தொலைவிலுள்ள ஒரு ஏகாதிபத்திய வெறியர்களோடு போராடி வருகிறோம்!

சில்லறைகள் செய்யும் விஷமத்தை அலட்சியப்படுத்துங்கள்!

நம்முடைய நாட்டமெல்லாம் நாட்டு விடுதலை மீதுதான் இருக்கவேண்டும்

நாம் பார்த்தால் பொடிப் பொடியாகி விடுபவர்கள் நமக்கு எதிரிகளா?

சென்னையில் சம்பத் சங்கநாதம்!

அன்புள்ள தலைவர் அவர்களே! அருமைத் தோழர்களே! தாய்மார்களே! நண்பர்களே!

இன்று இந்த ஊரில் இவ்வளவு பெரிய மாபெரும் கூட்டத்தில் பேசும் வாய்ப்புக் கிடைத்தமைக்குப் பெரிதும் மகிழ்கிறேன்.

இந்தக் கூட்டத்தில் இவ்வளவு பேர்கள் கூடியிருக்கிறீர்கள், இதைவிடச் சிறப்பு ஏராளமான பேச்சாளர்கள் பேசியிருக்கிறார்கள். அதை விடச் சிறப்பு இவ்வளவு பேர்கள் பேசினாலும் ஒவ்வொருவருடைய பேச்சுக்களும் மிக நன்றாக, அர்த்த புஷ்டியுடையதாக இருந்ததுடன் அவர்கள் பேச்சுக்களெல்லலாம் என்னை மிகவும் ஈர்த்துவிட்டது. இதை ஒரு பேச்சுக்காகக் கூறவில்லை. அவர்கள் பேசிய ஒவ்வொரு கருத்துக்களும் மிகவும் அவசியமானதாகவும், ஆராய்ச்சிக்குரியதாகவுமிருந்தது.

கடைசியாகப் பேசிய நண்பர் மட்டும் மிகவும் ஆத்திரமாகவும் ஆவேசமாகவும் பேசினார். காங்கிரஸ்காரர்கள் இன்று கடைப்பிடித்து வரும் பலாத்காரச் செய்கைகளை எடுத்துக் கூறி, "வா பார்க்கிறேன்" "சந்திக்கிறேன்" "எதற்கும் தயார்" என்பது போன்ற கடுஞ் சொற்களை உபயோகப்படுத்திப் பேசினார். இது தேவையற்றது. அவர்கள் செய்கைகளால் நாம் ஒன்றும் அழிந்து விடமாட்டோம். ஒழிந்துவிட மாட்டோம்.

இன்று நாம் பெரும் தொலைவிலுள்ள ஒரு ஏகாதிபத்ய வெறியர்களுடன் போராடி வருகிறோம். அவர்களின் எதிர்ப்பைச் சமாளித்து வருகிறோம். அப்படி இருக்கும் போது இன்று இங்கு இருக்கின்ற சாதாரணமான சில சில்லறைகளை செய்யும் காரியங்களைக் கண்டு ஆத்திரப்பட்டுக் கொண்டிருப்பதில் பயனில்லை. அவர்கள் நமது எதிர்ப்பைத் தாங்கக் கூடியவர்களல்ல. இங்குள்ளவர்கள் செய்யும் காரியங்களை நாம் மிகவும் பெரிதுபடுத்திக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

நம்முடைய கவனமெல்லாம் நமது நாடு விடுதலை அடைவதற்கான வழிகளில் இருக்க வேண்டும். நமது செயல்களெல்லாம் நம்முடைய உரிமைகளைப் பெறுவதற்கான முறையில் அமைந்திருக்க வேண்டும். சில்லறைகள் செய்கிற சிறுவிஷயங்களில் நாம் கவனம் செலுத்திக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

இன்று நம்மைத் தாக்குபவர்கள் நம் எதிரில் நிற்பதற்கே லாயக்கற்றவர்கள். நாம் ஒரு முறை தலை நிமிர்ந்து முறைத்துப் பார்த்தாலே சாப்பலாகிவிட வேண்டிய நிலையிலுள்ள இவர்களால் என்ன செய்துவிட முடியும்? நம்மை எதிர்த்து நிற்கக் கூடிய தைரியமோ, பலமோ, சக்தியோ, அவர்களுக்குக் கொஞ்சமும் கிடையாது. அவர்கள் நம்மைத் தாக்குகிறார்கள், நமக்குக் கேடு விளைவிக்கிறார்கள். நம் தோழர்களிடம் பலாத்காரமாக நடந்து கொள்கிறார்கள் என்றால் இது இன்றுதான் கையாளுகிறார்கள் என்பதல்ல. பல ஆண்டுகளாக அவர்கள் கையாண்டு வருவதைத்தான் இன்றும் அவர்கள் கையாண்டு வருகிறார்கள் இதைக் கண்டு நாம் ஏன் கவலைப்பட வேண்டும். நாம் திராவிடர் சமூகத்திலிருக்கும்போது இந்த மாதிரி இழிவான செய்கைகளில் ஈடுபட்டு நமக்குப்

(9ம் பக்கம் பார்க்க)

நிதிமந்திரி சுப்பிரமணியத்தின் ஐரோப்பிய சுற்றுப் பிரயாணத்திலே :

சின்னஞ் சிறுநாடுகளாக சிதறுண்டு கிடக்கும் ஐரோப்பா கண்டத்தைப் பார்ப்பார் !

அதன் செழுமையைக் கண்ணால் காண்பார்!

போலந்தும், பின்லாந்தும், ஸ்வீடனும், நார்வேயும், டென்மார்க்கும், ஸ்விட்சர்லாந்தும் நிதி அமைச்சரின் ஏகபாரத போதையைத் தணிக்கும், போக்கும் !

திரும்பிவந்தால் புது மனிதராவார், புரட்சிகள் பல செய்வார் !

நமது நிதியமைச்சர் கனம் சுப்பிரமணியம், ஐரோப்பாக் கண்டம் முழுவதும் சுற்றுப் பிரயாணம்செய்ய நீண்டதோர் சுற்றுப் பிரயாணத் திட்டம் வகுத்துக்கொண்டு இங்கிலாந்து நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிறார்!

ஐரோப்பியக் கண்டத்தின் தொழில் வளங்களைக் காணவும் அணு ஆராய்ச்சி நிலையத்தின் அற்புத சக்தியைக் கண்டு களிக்கவும், அங்குள்ள மக்களின் எண்ணவளத்தை தெரிந்து கொள்ளவும், அவர்களின் அறிவுத் திறனைக் கண்டு வியந்து மகிழவும் இந்த சுற்றுப் பிரயாணத் திட்டம் அவருக்கு உதவும் என்று நம்புகிறோம்.

முதன் முதலாக மேல்நாடுகளுக்குச் செல்லும் நமது நிதி அமைச்சரை, காங்கிரஸ்காரர்களைப்போல நாமும் வாழ்த்தி வழிகூட்டி அனுப்பி வைக்கிறோம்! "செல்லுங்கள், அங்குள்ள தொழில்வளங்களைக் காணுங்கள், மொழிப்பற்றைக் காணுங்கள், இனப்பற்றின் மகிமையை அறியுங்கள்— திருப்பி வந்துச் சொல்லுங்கள்- கண்டதையும், கேட்டதையும், பார்த்ததையும், பார்த்து மகிழ்ந்ததையும் மறைக்காமல் சொல்லுங்கள்" என்று கூறி மீண்டும் ஒரு முறை நமது நிதி அமைச்சருக்கு எங்கள் நல்வாழ்த்துக்களைக் கூறுகிறோம்!

நமது நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம், சென்னை சட்டசபையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி நீண்டதோர் விவாதம் நடத்தி விட்டு —பிரிவினைக் கொள்கையை கைவிடுமாறு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு வேண்டுகோளையும் விடுத்து விட்டு தனது மேல்நாட்டுச் சுற்றுப்பிரயாணத்தை ஆரம்பித்திருக்கிறார்! அத்தோடு மொழிக் கொள்கையைப்பற்றியும் விவாதித்துவிட்டுச் சென்றிருக்கிறார்!

ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பல்வேறு நாடுகளில் அவர் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது, சென்னை சட்டசபையில் நடைபெற்ற விவாதங்கள் அவரது மனக்கண் முன் வந்து நிற்கும் என்பதில் எங்களுக்குத் துளியும் சந்தேகமில்லை! நீண்ட நெடு நாட்களாக பெரும் குழப்பத்திற்குள்ளாகி நிற்கும் அவரது உள்ளத்திற்கு சற்று தெளிவும் ஏற்படக்கூடும் என்றும் எண்ணுகிறோம்!

நமது நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் சென்னைவிமான நிலையத்தில் விமானம் ஏறிய உடனேயே அவரது சிந்தனையும் அந்த விமானத்தோடு போட்டியிட்டு சிறகடித்துப் பறக்க கூடும்! ஒருகணம் திகைப்பார், ஒருகணம் வியப்பார், ஒரு கணம் மன ஆறுதலைப் பெறுவார்!

மாஜி எஜமானர்கள் வாழும் நாட்டிற்குச் செல்லுகிறோமே என்ற திகைப்பும், நாம் விரட்டி விரட்டியடித்தும் நம்மைவருந்தி வருந்தி அழைக்கிறார்களேஎன்ற வியப்பும், இது தான் மனிதப் பண்பு போலும் என்று மன ஆறுதலும் அவருக்கு ஏற்படக் கூடும்!

நமது நிதி அமைச்சர் லண்டன் பட்டணத்தை அடைவதற்குள் அவரது எண்ண வட்டத்தில் எத்தனையோ சுழல்கள் தோன்றக்கூடும்! எத்தனையோ சிந்தனைக் குமிழிகள் கிளம்பி உடையக் கூடும்! லண்டன் பட்டணத்தை அடைந்து விட்டால் மட்டும் அவருக்கு மன ஆறுதல் ஏற்படுமா என்பதும் கொஞ்சம் சந்தேகம்தான்!

வரிசை வரிசையாக வானத்தை நிமிர்ந்து பார்த்துக்கொண்டிருக்கும் கட்டிடங்களைக் காணும் நேரத்தில், வனப்பில், எடுப்பில், சிறப்பில் சிறந்து விளங்கும் அந்தச்சிங்கார நகரத்தின் கண்கவர் காட்சிகளைக் காணுகின்ற நேரத்தில் அவருக்குச் சற்று மன மகிழ்ச்சியை உண்டாக்கக் கூடும்!

ஆங்கில நாட்டுச் சீமையை சீமான்களின் கோட்டமாக்கிய தொழில் வளங்களைக் காணுகின்ற நேரத்தில், நெசவாலையை காணுகின்ற நேரத்தில் பெரும் தொழிற்சாலைகளைக்காணுகின்ற நேரத்தில், அணு ஆராய்ச்சிக் கூடத்தைக் காணுகின்ற நேரத்தில் அவரது உள்ளம் பொதுநோக்குப் படைத்த உள்ளமானால், அது துடியாய்த் துடித்திடும்; அனலில்பட்ட புழுவாய்த் துடித்திடும்!

கொஞ்சம் சபலப்புத்தி படைத்த உள்ளமானால் "இவர்களையா விரட்டி யடித்தோம்" என்று எண்ணினாலும் எண்ணக் கூடும்!

ஆங்கிலேயர்களின் பண்பையும், ஆங்கிலேயர்களின் அதிசய குணங்களையும், ஆங்கிலேயர்களின் அரசியல் நாகரிகத்தையும், ஆங்கிலேயர்களின் ஆற்றலையும், ஆங்கிலேயர்களின் அறிவுத் திறனையும் கண்டு — அவரது உள்ளம் கொஞ்சம் பொறுமைக்கு இடம் கொடுக்குமானால் ஒரு பெருமூச்சு விடுவதைத் தவிர அவருக்கு வேறு என்னதான் வழி இருக்கிறது!

மண்டபத்து விருந்தையும், பிரபுக்களின் நைலாருவையும், மன்னர் பரம்பரையினர் தரும் மந்தகாச வரவேற்பையும் பெற்றுக் கொண்டு அதைவிட்டுப் புறப்படுவார்!

அங்கிருந்து புறப்பட்டு ஸ்வீடன் செல்வார்; அவரது உள்ளம் பதை பதைக்கும்! அங்கிருந்துப் புறப்பட்டு ஸ்வீடனோடு பின்னிக் கிடக்கும் நார்வேயிக்குச் செல்வார்! அவரது உள்ளம் துடிதுடிக்கும்! அங்கிருந்துப் புறப்பட்டு டென்மார்க் வருவார்! அவரது நெஞ்சம் கொதிக்கும்! அங்கிருந்துப் புறப்பட்டு போலந்து நாட்டிற்குச் செல்வார், பின்லாண்ட் போவார்! அவரது உடல் வியர்க்கும், விறுவிறுக்கும்! அங்கிருந்துப் புறப்பட்டு மேற்கு ஜெர்மெனிக்கு வருவார். கிழக்கு ஜெர்மனிக்குப் போவார்! இங்குமா பாக்கிஸ்தான் என்று புலம்புவார்! அங்கிருந்துப் புறப்பட்டு ஸ்விட்சர்லாந்து செல்வார்! "ஐயோ, ஐயோ! இதென்ன கூத்து" என்று வயிற்றில் அடித்துக் கொள்வார்! அங்கிருந்து புறப்

ஒன்றுபட்ட இந்தியா சாதிக்காத சாதனையை சிதறுண்ட ஐரோப்பா சாதித்திருக்கிறது !

பரந்த பூமியை பிளந்தவர்கள் வாழ்கிறார்கள்; பாரதமென்பவர்கள் பஞ்சையாய்த் துடிக்கிறார்கள் !

அய்யய்யோ நிதி அமைச்சரே, உங்கள் நெஞ்சம் கொதிக்கவில்லையா ? நிலை தடுமாறவில்லையா ?

பட்டு இத்தாலிக்கு வருவார்—இரத்தக் கண்ணீர் வடிப்பார் ! அங்கிருந்துப் புறப்பட்டு பிரான்சுக்கு வருவார் ! அவருக்குப் பைத்தியமே பிடித்துவிடும் !

" ஐரோப்பா ஐரோப்பா" என்று சொல்லுகிறார்களே—இந்த ஐரோப்பாக் கண்டத்தில் இத்தனைப் பிரிவினைகளா ? 'ஐரோப்பியர்கள், ஐரோப்பியர்கள்' என்று சொல்லுகிறார்களே இந்த ஐரோப்பியர்களிடத்தில்இத்தனைபேதங்களா? ஒரே நிலப்பரப்பில் இத்தனை எல்லைக் கோடுகள் ஏன்? ஒரே நிலப்பரப்பில் இத்தனை ஆட்சி ஏன்? ஒரே நிலப்பரப்பில் இத்தனை அரசுகள் ஏன் ? ஒரே நிலப்பரப்பில் இத்தனைக் கொடிகள் ஏன் ?

"ஏன்? ஏன் ?" இந்த ஏன், ஏன் என்ற வினவுக்கு எவருமே விடையளிக்க மாட்டீர்களா ?

பரந்து கிடக்கும் பூமியை ஏன் வெட்டினீர்கள் ? அகன்று கிடக்கும் நிலப்பரப்பை ஏன் கூறு போட்டுக் கொண்டீர் ? எல்லோரும் ஐரோப்பியர்கள் தானே ! எல்லோரும் ஐரோப்பிய இனத்தவர்கள் தானே ? ஏன், ஏக ஐரோப்பிய நாட்டை அமைக்கக் கூடாது ! ஏன் அகில ஐரோப்பியர்களாக வாழக் கூடாது ! போலந்து ஏன், பின்லாந்து ஏன்—நார்வே ஏன், ஸ்வீடன் ஏன்—இத்தாலி ஏன், ஸ்விட்சர்லாந்து ஏன்—பிரான்ஸ் ஏன், ஜெர்மனிஏன்? அதிலும் கிழக்கு ஜெர்மனி, மேற்கு ஜெர்மனி என்ற பேதமேன் ?"

"ஐரோப்பியர்களே ! இத்தனைத் தொல்லைகளுக்கும், இத்தனை இன்னல்களுக்கும் காரணம் உங்கள் மொழிக் கொள்கைதான் ! உங்களுக்கேன் இத்தனை மொழி ? "ஒரே மொழி, ஐரோப்பா முழுவதற்கும் ஒரே மொழி' என்ற கொள்கையை கடைபிடித்தால் இத்தனைப் பிரிவினைகள் ஏற்பட்டிருக்குமா? இத்தனை தீய சக்திகள் உருவெடுத்திருக்குமா ?"

"இப்படித் துண்டு துண்டாகப் பிரிந்து கிடந்தால் வாழ முடியுமா ! தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ளும் சக்தி இந்த சிறு நாடுகளுக்கு இருக்குமா ?"

'எங்கள் இந்தியாவைப் போல் ஐரோப்பிய நிலமும் பரந்துதானே கிடக்கிறது, ஒன்றுக இணைந்துதானே கிடக்கிறது ! ஒன்றுபட்டுக் கிடக்கும் நிலத்தை ஏன் கூறு போட வேண்டும் ! ஏன் குறுக்கும் நெடுக்குமாக எல்லைக் கோடுகளைக் கிழிக்க வேண்டும் !" இப்படியெல்லாம் ஐரோப்பிய மக்களைப் பார்த்து நமது நிதி அமைச்சர் கேட்கமாட்டார் !

சென்னை சட்டசபையில் பிரிவினைக் கொள்கையை கைவிடுமாறு நம்மைக் கேட்டதுபோல் ஐரோப்பிய மக்களைப் பார்த்து " ஒன்றுபடுங்கள் " என்று சொல்லி இருந்தால் அவர்கள் தக்க பதிலளித்திருப்பார்கள் !

"ஆமாம், ஆமாம் !" நாங்கள் கூட படித்தோம் ! உங்கள் நாட்டில் ஏதோ ஒரு கட்சி இருக்கிறதாமே, அந்த கட்சியின் பெயர் கூட தி. மு. க. வாமே ! அந்தக் கட்சி நாட்டைப் பிரித்துக் கேட்கிறதாமே! "அது கூடாது" என்று கூட நீங்கள் சட்டசபையில் பேசினீர்களாமே ! என்று கூறி விட்டு—"எங்களுக்கு மொழிப் பற்று இருக்கிறது, நாட்டுப் பற்று இருக்கிறது" என்றும் சொல்லி இருப்பார்கள் !

"நாங்கள் அனைவரும்ஐரோப்பியர்கள்—அதில் துளியும் சந்தேகமில்லை ! ஆனால் இங்கு பல்வேறு மொழி பேசும் மக்கள், பல்வேறு இனத்தைச் சார்ந்த மக்கள் வாழ்கிறார்கள் ! ஆங்கில மொழிப் பேசும் ஐரோப்பியர்கள் ஆங்கிலேயர்களாக தனிநாடு அமைத்துக் கொண்டு தனியாட்சி நடாத்தி வாழ்கிறார்கள்! பிரெஞ்சுமொழி பேசும் ஐரோப்பியர்கள் பிரெஞ்சுக்காரர்களாகதனிநாடு அமைத்துக் கொண்டு வாழ்கிறார்கள்" என்று ஐரோப்பிய மக்கள் பதில் சொல்லக் கூடும் !

"பிரிந்து விட்டால் தொழில் வளம் பெருகாது " என்றும், "உற்பத்தியான பொருள்களை விற்பனை செய்ய முடியாது" என்றும் கூறி இருக்கிறார் !

சென்னையிலிருக்கும் ஸ்டாண்டர்ட் மோட்டார் கம்பெனி உற்பத்தி செய்யும் கார்களை எங்கே விற்பது? நாமே வாங்கிக் கொள்ள முடியுமா? என்றெல்லாம் சென்னை சட்டசபையில் கேட்டிருக்கிறார்! இதைக் கண்டு சிரிப்பதா, அழுவதா ? அல்லது நமது அமைச்சரைப் பற்றி சிந்திப்பதா என்றுதான் புரியவில்லை !

ஒன்றுபட்ட இந்தியாவில் விளையும் வெங்காயம், ஒன்றுபட்ட இந்தியாவில் விளையும் மிளகு, ஒன்றுபட்ட இந்தியாவில் விளையும் பருத்தி, ஒன்றுபட்ட இந்தியாவில் விளையும் மற்ற, மற்ற பொருள்களெல்லாம் ஒன்றுபட்ட இந்தியாவில் மட்டும்தான் விற்பனையாகிறதா?

இந்தியா துண்டுபட்டால் இங்கு உற்பத்தியாகும் கார்களை வடநாட்டிற்கு அனுப்பவே கூடாதா ?

[12ம் பக்கம் பார்க்க]



தேர்தல்புரி யாத்திரை

பி.எஸ்.இளங்கோ

18

"திராவிட நாடு, திராவிட நாடு" என்று கேட்கிறீர்களே! அந்தகற்பனைத்திராவிடத்திற்கு எல்லை எது என்பதையாவது தெரிந்து கொண்டிருக்கிறீர்களா?

"ஒரு தோழர் சொல்லுகிறார் திராவிடம் கற்பனை என்று! உண்மையிலேயே திராவிடம் ஒரு கற்பனைதான்! சிந்தனையிலே எழுவதுதான் கற்பனை! கவிஞன் காவியம் புனைகிறான். அது கற்பனை தான் — ஆனால் அந்த கற்பனை அழகு ஓவியமாக உருவெடுக்கிறது, உயிர் காவியமாக உருப்பெறுகிறது! அந்த ஒப்பற்ற காவியங்களைத் தான் நாடு போற்றுகிறது, மக்கள் புகழ்கிறார்கள்! கற்பனையில் எழுவதுதான் வாழ்வு. கற்பனையிலே தோன்றுவததான் நாடு, கற்பனையிலே உதிப்பது தான் நகரம், கற்பனையால் உருப்பெறுவதுதான் ஆட்சி! காந்தியாரின் கற்பனையிலே கிடைத்ததுதான் சுதந்திரம்! ஜனுப் ஜின்னாவின் கற்பனையால் கிடைத்ததுதான் பாக்கிஸ்தான்! சிந்தனையாளர்கள் செய்திடும் கற்பனைகளுக்கு உருவம் உண்டு, உயிர் உண்டு, அதனால் அதற்குப் பலனும் உண்டு! வரண்ட மூளைகள் செய்திடும் கற்பனைகளுக்கு உயிருமில்லை, உருவமும் இல்லை! அதனால் அது பாலைவனத்துக் கானல் நீராகி விடுகிறது!

"எல்லைகள் எது என்றும் கேட்கிறார் அந்தத் தோழர்! பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு விடுதலைப் பெற்ற இந்தியாவின் எல்லையை வகுக்காத வகுக்க முடியாத தொல்லைபட்டுக் கொண்டிருக்கும் நண்பருக்கு—இல்லை, இல்லை அந்த நண்பர் சார்ந்திருக்கும் கட்சித் தலைவர்களுக்கு — திராவிடம் விடுதலை பெறுகிற போது அழைப்பு அனுப்பப்படும் — அவர்களோடு கூடிப் பேசி எல்லையை நீதியோடு வகுத்துக் கொள்ளப்படும்!

'உங்கள் திராவிட நாட்டை ஆந்திரர்கள் ஆதரிக்கிறார்களா? கேரளத்தார்கள் கேட்கிறார்களா? கன்னடியர்கள் விரும்புகிறார்களா? இல்லை என்று சொல்லும்போது உங்களுக்கு எப்படி திராவிடநாடு கிடைக்கும்?"

இந்தக் கேள்வி பத்தாண்டு காலமாக கேட்கப்பட்டு வருகிற கேள்வியாகும். பத்தாண்டு காலம் என்றுச் சொல்வதை விட ஐம்பதாண்டு காலமாகவே கேட்கப்பட்டுவந்த கேள்வியுமாகும்! காந்தியார் சுதந்திரம் கேட்டபோது, "உங்கள் நாட்டில் இந்தசுதந்திரத்தை மிட்டாக்கள் விரும்பவில்லை, மிராசுகள் விரும்பவில்லை, சிற்றரசர்கள் விரும்ப வில்லை, ஜமீந்தார்கள் விரும்ப வில்லை, முத்தையா செட்டியார் விரும்பவில்லை, ராஜா சர் அண்ணாமலை செட்டியார் விரும்பவில்லை, சாமியப்பா விரும்பவில்லை, அவர் மகன் இராமலிங்கமும் அப்போது விரும்பவில்லை, ஜஸ்டிஸ் கட்சி சுப்பராயன் விரும்பவில்லை — நாங்கள் எப்படி சுதந்திரத்தைத் தருவது" என்று வெள்ளைக்காரனால் கேட்கப்பட்டு வந்த கேள்வியுமாகும்! உங்களுக்கு நியாயமான முறையில் பதில் சொன்னால் அதை நீங்கள் ஏற்க மாட்டீர்கள்! பெரியார், உங்கள் கன்னத்தில் அடித்து பதில் சொல்லுவதுபோல் நாங்களும் சொன்னால்தான் உங்கள் வாயடைக்கும்! இந்தியாவில் ஒரு பாகம் என்று சொல்லப்பட்ட பாக்கிஸ்தான் போன பின்பும், இந்தியாவிற்கு இந்தியா என்றுதான் பெயர்! இந்தியாவில் ஒரு பாகம் என்று சொல்லப்பட்ட பர்மா பிரிந்த பின்பும் இந்தியாவிற்கு இந்தியா என்றுதான் பெயர்! பாண்டிச்சேரி, காரைக்கால் கிடைப்பதற்கு முன்பும், இந்த நாட்டை இந்தியா என்றுதான் சொல்லி வந்தீர்கள்! ஆந்திரர்களைக் கூப்பிடுவோம், கன்னடியர்களை அழைப்போம், மலையாளிகளின் ஆதரவையும் திரட்டுவோம்! நிச்சயமாக அவர்களுடைய ஆதரவு கிடைக்கும்! அப்படியே கிடைக்காமல் போனால், கிடைத்த ஆதரவை வைத்துக கொண்டு கிடைக்கிற இடத்தைப் பெறுவோம்!'

டெல்லியை அந்நிய நாடு என்று எப்படிச் சொல்ல முடியும்? இந்தியாவில் பிறந்து விட்ட நேருவை அந்நியர் என்று எப்படிக் கூற முடியும்!"

"ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள லண்டனை எந்த காரணத்தால் அந்நிய நாடு என்று சொன்னீர்களோ, அதே காரணத்தைக் காட்டி தான் இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள டெல்லியையும் அந்நியநாடு என்று கூறுகிறோம்!

"ஆங்கில மொழி பேசுவதால் எப்படி சர்ச்சிலை அந்நியர் என்று கூறினீர்களோ அதே போல்தான் ஹிந்தி மொழி பேசும் நேருவும் நமக்கு அந்நியராவார்! நீங்கள் இதைத்தான் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்! ஒரு நாட்டின் அமைப்பு எல்லையை மட்டும் வைத்துக் கொண்டு இயங்குவதல்ல! கடல் இருந்தால், வாய்க்கால் வெட்டப்பட்டால் தான் தனிநாடு என்றும் சொல்லுவதில்லை! மொழியால், பண்பால், நாகரீகத்தால், நடையால் உடையால், பாவனையால், பழக்க வழக்கத்தால்தான் நாடு அமையவேண்டும். உலகமெங்கும் அப்படித்தான் அமைந்திருக்கிறது! இந்தியத் துணைக் கண்டத்தில் கூட அப்படித் தான் பாக்கிஸ்தானும் அமைந்திருக்கிறது! ஆங்கில மொழி பேசும் ஆங்கிலேயர்களும், பிரஞ்சு மொழி பேசும் பிரெஞ்சுக்காரர்களும் ஒரே நிறமுடையவர்கள்தான், அதுமட்டுமல்ல ஏறத்தாழ ஒரே பழக்க வழக்கங்களையும்—கிட்டத்தட்ட ஒரே நாகரீகத்தை ஒரே பண்பாட்டினையும் கடைபிடிப்பவர்கள் தான்! அப்படி இருந்தும் பிரஞ்சுக்காரனை ஆங்கிலேயன் அந்நியன் என்று எண்ணுகிறான்—அதே போல் பிரெஞ்சுக்காரனும் ஆங்கிலேயனை அந்நியன் என்று எண்ணுகிறான்! இருவரும் தனித் தனியாக, மொழியால் நாட்டைப் பிரித்து வாழ்கின்றனர்!

'டெல்லிக்காரனுக்கும், நமக்கும்—இவர்களிடையே இருக்கும் ஒற்றுமைகூட கிடையாது! டெல்லிக்காரனுடைய பண்பு வேறு, நம்முடைய பண்பு வேறு! டெல்லிக்காரனுடைய நாகரீகம் வேறு, நம்முடைய நாகரீகம் வேறு! டெல்லிக்காரனுடைய மொழி வேறு, நம்முடைய மொழி வேறு! எனவேதான் நாம் டெல்லிக்காரனை அந்நியன் என்று சொல்லுகிறோம்! அதனால்தான் திராவிடமும் கேட்கிறோம்! நாம் முதலில் அடிமை என்பதை உணர்ந்து கொண்டால்தான் நமக்கு நல்வாழ்வும் கிடைக்கும்!

காங்கிரஸ்காரர்கள் கேட்ட இந்த கேள்விகளுக்கு உதயசூரியன் விளக்கத்தோடு பதில் தந்து விட்ட காரணத்தால் அவர்களுக்கு ஆத்திரமும் பொறாமையும் பொங்கி எழ ஆரம்பித்தது!

"டே! மேடையை விட்டு கீழே இறங்கு" என்றான் ஒரு காலி!

'கீழே இறங்குறியா இல்லையா" என்று பயமுறுத்தினான் ஒரு சதைப் பொதியன்!

"அடிமேல் அடி கொடுத்தால் அம்மியும் நகரும்... ரெண்டு தட்டு தட்டுடா" என்றான் ஒரு ரௌடி!

அவ்வளவுதான் கூலிப்படைகள் அத்தனையும் உதயசூரியன் மீது வேட்டை நாய்களைப் போல் கவ்விப் பிடித்தன! உதயசூரியன் பலமாகத் தாக்கப்பட்டான்! படுகாயமடைந்தான்!

வரிசை வரிசையாக நின்று கொண்டிருந்த போலீஸ் புலிகளும் அந்த ரௌடிக் கூட்டங்களுக்கே துணைபுரிந்தன!

அடிபட்டு படுகாயமடைந்துக் கிடந்த உதயசூரியன் கைது செய்யப்பட்டான்! சிகிச்சைக்காக ஒரு மருத்துவ மனையிலும் சேர்க்கப்பட்டான்!

காங்கிரஸ்காரர்களுக்கு ஒரே மகிழ்ச்சி! போட்ட திட்டம் நிறைவேறி விட்டதாக ஒரே களிப்பு, ஒரே கொண்டாட்டம்! இப்படிக் காலித்தனங்களில் இறங்காவிட்டால் அந்தப் பயல்களின் கொட்டமும் அடங்காது! வருகிற தேர்தலுக்குள் அந்தப் பயல்களின் பூண்டுகளை அறவே ஒழித்து விடவேண்டும்! அப்படி ஒழிக்காவிட்டால், நாம் வாழவே முடியாது! நாம் மேற்கொண்டுள்ள தேர்தல்புரி யாத்திரைக்குத் தடைகற்களாகநிற்கும் தான்தோன்றிகளின் தலைகள் அத்தனையும் உருள வேண்டும்! நம்முடைய தேர்தல்புரி யாத்திரையில் எது குறுக்கிட்டாலும், எவர் தலையிட்டாலும்

டெல்லியதிகாரம் !

பஜனை செய் படலம்

"டெல்லி சரனம் நேருச்சாமி!"–காமராஜர்

"பந்த் சரணம் நேருச்சாமி!"-சுப்பிரமணியம்

"பாரதம் சரணம் நேருச்சாமி!"–கக்கன்.

"யாரது?..யாரங்கே?"–நேருவின் குரலில் அனல் வெடித்தது

"தங்கள் அடியானுக்கு அடியான்ஸ்வாமி"–காமராஜர்.

"தங்கள் தாசானுதாசன் எசமான்"–சுப்பிரமணியம்.

"தங்கள் சிஷ்யாதி சிஷ்யன் சிரேஷ்டா!"-கக்கன்.

நேரு உற்றுப்பார்த்தார். பின்தெளிந்து.."ஓகோ...சென்னையர்களா?..வாரும்.."

"ஆமாம் குருவே!"மூவரும் இடுப்பில் துணியைக் கட்டிக்கொண்டு வணங்கி எழுகின்றனர்.

"என்ன விசேஷம்?"-பந்த் உருட்டி விழித்தார்.

ஒருகணம் விழியைப்பார்த்த காமராஜருக்கு திடீரென்று 'டைபாய்டு ஜுரம்' வந்துவிட்டது பெல்லதிரும்பி கக்கனைப் பார்த்தார். கக்கன் உடம்பெல்லாம் கிடுகிடு வென்று நடுங்க தொட்டென்று கீழே விழுந்தார் சுப்பிரமணியம் கொஞ்சம் சுணைத்துவிட்டு தட்டுத் தடுமாறிக் கூறினர் வியர்வையை வழித்துக் கொண்டே!...

"தூத்துகுடித் துறைமுகத்திட்டம்?..."

"என்ன?"பந்த் உறுமினர். அவர்உடல் ஆத்திரத்தால் படபடத்தது. மீசை துடித்தது...

"மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில்கூட...கூட..கூட.. வேண்டாம்" காமராஜரின் நாக்கு குழறியது.

"பலே, பலே!"–நேரு சிரித்தார்.

காமராஜருக்கு இடுப்பு வரை உயிர் வந்தது!

சுப்பிரமணியத்திற்கு நெஞ்சு வரை உயிர் வந்தது !

கக்கனுக்கு முழங்கால்வரை உயிர் வந்தது !

"உம். சென்னையிலே ஏதாவது நடக்கிறதா?"–பந்த்.

"ஆகா! தங்களின் மேலான நயனுனுக்கிரக தீக்ஷண்ய கைங்கர்யத்தால் திவ்ய சுப க்ஷேமத்தில் திளைக்கிறது சென்னை."-காமராஜர் பல்லை இளித்தார்.

"அந்த தி. மு. க.க்கள் ஏதாவது ...?"

"பல்லைப் பிடிங்கிவிட்டேன் எசமான்"–காமராஜர்.

"அது மட்டுமா ?"

"நாக்கை அறுத்துவிட்டேன் குருவே"–சுப்பிரமணியம்.

"இவ்வளவுதானு ?"

மூச்சு பேச்சில்லை சாமி!"–கக்கன்.

" சந்தோஷம் !"- பந்த்.

" பிரிவினையே கூடாதென்று பிரச்சாரம் செய்யுங்கள்!"-நேரு.

"ஆகட்டும் ஸ்வாமி !"–காமராஜர்.

" இராமாயண காலந்தொட்டு ஒட்டி வருகிறது உறவு "–நேரு.

" ஆமாம் ஆமாம் " காமராஜர்.

" இராமன் எங்கே பிறந்தான் தெரியுமா ?"

" இலங்கையிலே ஸ்வாமி !"—கக்கன்.

" சீ! நான்சென்ஸ்! யாரது இந்த பிரகஸ்பதி ?"

" மந்திரிங்க"–சுப்பிரமணியம் குரலில் மரணம் இழைந்தது.

" மந்திரியா ?"

" தங்கள் பாத பூஜைக்காகவே ஸ்பெஷல் கண்டு பிடிப்புங்க "இது" -காமராஜர்.

" பேஷ், பேஷ் பலே பலே !"–பந்த்.

"வெரிகுட்"

கக்கனுக்கு புன்சிரிப்பு தவழ்ந்தது !

"நமஸ்தே எஜமான்"–காமராஜர்.

"ஜெய்ஹிந்த் குருவே " சுப்பிரமணியம்.

"வந்தேமாதரம் சாமி" கக்கன்.

"ஆகட்டும்"–நேரு, பந்த்.

"டெல்லி சரணம்! நேருச்சாமி"-காமராஜர்.

"பந்த் சரணம்! நேருச்சாமி "–சுப்பிரமணியம்.

"பாரதம் சரணம்! நேருச்சாமி"–கக்கன்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

நாம் சகிக்க மாட்டோம் ?" ரௌடித்தனத்தில் வெற்றி பெற்றுவிட்ட காங்கிரஸ்காரர்கள் இப்படி களிப்படைந்து, மகிழ்ந்துக் கிடந்தார்கள் ! அவர்களுக்கு ஒரே குதூகலம், ஒரே கொண்டாட்டம் !

"ஏய் ! என்ன சிரிக்கிறே !" மீசையை முறுக்கிக் கொண்டே ஒருவன் அதட்டினுன் !

"சிரிப்பான், சிரிப்பான் ஆளு ஏமாந்தவனு இருந்தா சிரிப்பான்" என்ருன் இன்னெருகுண்டன் ?

"என்னண்ணே ! இப்படி கோவிச்சிக்கிறே ! என்னு நடந்துட்டுது சொல்லு" என்ருன் அங்கே மகிழ்ந்திக் கொணடிருந்த ஒரு காங்கிரஸ்காரன் !

"ஏய்! செல்லாத நோட்டைக் கொடுத்துவிட்டு சிரிப்பா சிரிக்கிறா!" என்ருன் ஒரு ரௌடி !

"செல்லாத நோட்டா ? கள்ள நோட்டு அண்ணே அது ! கள்ள நோட்டைக் கொடுத்து நம்மை உள்ளே தள்ள பாத்துட்டான்ல" என்ருன் இன்னெருவன் !

வாய்ச் சண்டை கைச்சண்டையாக மாறிற்று ! காங்கிரஸ் வீரர்களின் மண்டைகள் உடைந்தன. ரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓட ஆரம்பித்தது !

"எந்த ரௌடிகளைக் கொண்டு உதய சூரியனை வீழ்த்தினர்களோ அதே ரௌடிகளால் வீழ்ந்தார்கள்! பாவம் ! காங்கிரஸ்காரர்கள் எப்போதுமே தன்னம்பிக்கை இல்லாதவர்கள் போலும் ! கூலிப் படைகளை நம்பி காரியத்தில் வெற்றி பெற்று வீராதி வீரர்கள், சூராதி சூரர்கள் என்ற பட்டத்தைப் பெறவே எப்போதும் விரும்புவார்கள் போலும்! ஊர் மக்கள் இப்படியெல்லாம் பேசிக் கொண்டார்கள் !

தாக்கப்பட்ட காங்கிரஸ்காரர்களும் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள்!

மருத்துவ மனையில் படுத்திருந்த உதயசூரியன் கண் விழித்துப் பார்ததான் ! பக்கத்துப் படுக்கைகளிலே வரிசை வரிசையாக காங்கிரஸ் வீரர்கள் மண்டைக் கட்டுகளோடு கிடப்பதைக் கண்டான் !

நமக்கேற்பட்ட கதி இவர்களுக்கு எப்படி ஏற்பட்டது ! தன் வினை தன்னையே சுட்டுவிட்டது போலும் ! வினையை விதைத்தவன் வினையைத் தானே அறுக்க வேண்டும் !

"உடம்பு எப்படி இருக்கு உதய சூரியன்" டாக்டருடைய இந்தக் கேள்வி உதயசூரியனின் சிந்தனையைக் கலைத்தது!

(தொடரும்)

வாழ்த்துகிருேம்

நிகழும் திருவள்ளுவராண்டு 1991 ஆவணி 31ம் நாள் (15-9-1960) வியாழன் அன்று கீரம்பூர் எம்.எஸ். வேங்கடாசலம் எம்.ஏ. அவர்கட்கும் திரு கே.ரெங்காமி அவர்களின் செல்வி கௌசல்யாவுக்கும் அறிஞர் அண்ணு அவர்கள் தலைமையில் கீரம்பூர் உயர்நிலைப் பள்ளியில் திருமணம் நடைபெற்றது. அவ்வமயம் மணமக்களை வாழ்த்தி கலைஞர். மு. கருணநிதி நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி இராம அரங்கண்ணல். அன்பில் தருமலிங்கம். ஆகியோர் பேசினர்' இல்லறம் புகும் மணமக்கள் நீடு வாழநாமும் வாழ்த்துகிருேம்!

யாருக்கும் பயப்படாத கிழட்டுச் சிங்கம் பந்த்

கோடம்பாக்கத்தைக் கண்டு பயந்தார் !

(11ம் பக்கத் தொடர்ச்சி)

வாய் திறந்து "நான் பஞ்சாபி சுபா'வை கொடுத்துவிட்டேன்" என்று கூறவில்லையே தவிரமற்ற அத்தனை உறுப்பினர்களும் ஆணித்தரமாக, ஆவேசமாக, அழகாக விளக்கினார்கள், பஞ்சாபி சுபா'வை கொடுக்க வேண்டும் என்று'! பஞ்சாபி சுபாவைப் பெறுவதற்கு அம்மாநில மக்கள் அனைவரும், ஆடவரும், அழகு மணிபூண்ட ஆரணங்குகளும், இளைஞரும் முதியோரும், பாலகரும், இன்ன பிறரும் எழுந்து நின்று ஒருமித்த புரட்சிக் குரலில் "கொடு, பஞ்சாபி சுபாவைக் கொடு" என்று முழக்கமிடுகின்றனர். நாளுக்கொரு போராட்டம், வேளைக்கொரு புரட்சி என்ற முறையில் திடீர் திடீரென்று போராடுகின்றனர் அம்மக்கள்! டெல்லி 'மூலவிக்கிரங்கக'ளுக்கேபுரியவில்லை அங்கு என்னென்ன எப்போது,எப்படி நடைபெறுமென்று!

இதே போல் பெரியமொழிக் கிளர்ச்சி புயலென உருவெடுத்திருக்கிறது அஸ்ஸாம் மக்களிடையே! அந்த புயலில் 45 ஆயிரம் வங்காளிகள் ஆதரவற்ற அனாதைகளாக ஆக்கப் பட்டிருக்கிறார்கள். நான்கு தினங்களுக்கு முன்பு கூட அங்கு ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப் பட்டிருந்தது. தன் இனத்தவர்கள், தன்நாட்டவர்கள் இப்படி அகதிகளாக ஆக்கப் பட்டிருப்பதைக்கண்டும் பாரததேவி வாளா விருக்கிறாளே! வாய் திறந்து அனுதாபம் தெரிவிக்க வில்லையே என்று மக்கள் குமுறினார்கள்; கொந்தளித்தார்கள்! ஆணவடெல்லியின்போக்குக்கு ஆணித்தர எதிர்ப்பைத் தெரிவிக்க ஆசைப்பட்டனர். ஏன் நமக்கு சுதந்திரம்? ஏன் நமக்கு அந்த உயர் திருநாள் உள்ளம் நொந்து உருகிக் கண்ணீர் வடிக்கும் போது வெள்ளம்போல் நாம் கூடி ஏன் சுதந்திரத்திருநாள் கொண்டாட வேண்டும்? ஆகஸ்டு பதினைந்து ஏன்? என்று அந்த மக்களின் உள்ளத்திலே கேள்விப் புயல் எழுந்தது. எழுந்த மக்கள் ஒரு முடிவு செய்தனர்; ஆகஸ்டு பதினைந்து நமக்கெல்லாம் துக்க நாள் என்று!

சுதந்திரப் போராட்டத்திலே முழுபங்கேற்ற வங்கம் ஆகஸ்டு பதினைந்தை துக்க நாளாகக் கொண்டாடியது. இப்படி கொண்டாட வேண்டும்; இப்படித்தான் நமது கண்ணீரை—கலக்கித் தவிக்கும் உள்ளத்தை டெல்லியிலுள்ளபஞ்சு மெத்தை சுகவாச ஆணவக்காரர்களுக்கு தெரிவிக்கவேண்டும் என்று கூறியவர் அந்த மாநிலத்தின் மதிப்பிற்குரிய முதலமைச்சர்!

இத்தனைக் கலவரம் நடந்த பிறகும் வாய் திறவாத நேருவுக்கு எதிராக இந்த நடவடிக்கையை எடுத்தனர். அது மட்டுமல்ல தோழர்களே அந்த மக்களின் மொழிப் பற்றையும் நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள்; அவர்கள் அன்று வீடுவீடாக கறுப்புக் கொடியை ஏற்றி வைத்தனர். எவரிடத்தும் மகிழ்ச்சியில்லை;எந்தமாளிகையிலும்விருந்து இல்லை. இவைகளே வேண்டாம் என்று வங்காள கவர்னர் பத்மஜா நாயுடு கெசட்டில் ஒரு அறிக்கையை சமர்பித்தார். அதில் மேலும் விளக்குகிறார். "கண்ணீர் விடும் மக்களிடையே மகிழ்ச்சி எப்படி இருக்கும்; பூரிப்பு எப்படிவரும் ஆகையால் விருந்தோ, வேடிக்கையோ இல்லை" என்று! வங்காளத்தின் மதிப்பிற்குரிய முதலமைச்சர் பி. சி.ராய் அவர்கள், இந்திய ஆட்சியில் இப்படியும் மானத்தோடு,மதிப்போடு, சுயமரியாதையோடு மொழிப்பற்றோடுவாழலாம் என்பதை எடுத்துக்காட்டிவிட்டார். வாழ்க பி.சி.ராய்! வளர்க அவர் மொழிப்பற்று, நாட்டுப்பற்று!

இங்கேயோ, ஒரு ஏழு எட்டு பேர்கள் தமிழர்களின் இலக்கியத்தை,தமிழர்களின் எழில்மிகு மொழியை, தமிழர்களின் பண்பாட்டை, தமிழ் நிலத்தின் பெருவீரத்தை குலைத்து, அழித்துக் கொண்டு பதவி நாற்காலிக்குச் சென்றதும் தன் மானத்தை இழந்து, சுயமரியாதையைத் துறந்து ரோஷம், வெட்கம், அறிவு முதலியஎல்லாவற்றையுமே காற்றில் பறக்கவிட்டு வாழவேண்டும், பதவியிலேயே ஒட்டிக் கொள்ளவேண்டும் என்ற இலக்கணத்தை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எப்படிஇந்த பதவிக்கு வந்தார்கள், யாரால் இவர்களுக்கு மந்திரிப் பதவிவந்தது? என்பதையே மறந்துவிட்டு,காரணமான மக்களை— அவர்களின் கண்ணீரை துடைக்க மறந்து விடுகின்றனர். "எங்கள் மொழியைக்காப்பாற்றுங்கள் எங்கள் வறுமையைப் போக்குங்கள்" என்று கூறிமக்களால் அனுப்பப் படும் இவர்கள் அந்தமக்களையே வதைத்து கொடுமைப் படுத்துகிறார்கள். அந்தமக்களின்மானத்தையே வாங்குகின்றனர்.

அமைச்சராக வருபவர்கள் வடவருக்கு அடிபணியத்தான் வேண்டும் என்று நினைக்கிறார்கள். வடவர்களின் தாசர்களாக வாழத்தான் வேண்டும் என்று நினைக்கிறார்கள். அவர்கள் காலை நத்தினால்தான் பதவியிலே ஒட்டிக் கொள்ளமுடியும் என்று எண்ணுகிறார்கள். வங்காளத்தில் உள்ள மந்திரிகளின் உணர்ச்சியை, மொழிப்பற்றை, நாட்டுப்பற்றை இந்தத்'திண்ணை தூங்கி'களுக்கு எப்படித்தான் விளக்குவது? எப்படித்தான் புரிய வைப்பது என்றேநமக்குப் புரியவில்லை, அவர்களும் சாப்பிடுகிறார்கள்—இவர்களும் சாப்பிடுகிறார்கள் அவர்களுக்கும் மனைவி, மக்கள். உற்றார் உறவினர் உண்டு; இவர்களுக்கும் உண்டு. அவர்களும் தூங்குகிறார்கள்; இவர்களும் தூங்குகிறார்கள் ஆனால் ஒரே வித்தியாசம் அவர்கள் தூங்கினால் எழுந்து விடுகிறார்கள்.இவர்கள் தூங்கிக் கொண்டே இருக்கிறார்கள்! மொழிக்கு பங்கம் என்றால், மக்களுக்குத் துன்பம் என்றால், அவர்கள் தூங்கவே மாட்டார்கள்.

இவர்கள் எப்போதும் தூங்குவார்கள், ஓட்டு கேட்கப் போகும் நேரம், டெல்லி எசமானர்கள் வரும் நேரம் இரண்டைத் தவிர!

இவர்களை நம்பி நாம் மட்டும் சும்மா இருந்திருந்தால் இந்தி அரக்கி இந்நேரம் நமது குரல்வளையை இறுகப் பிடித்திருப்பாள். நாம் எதிர்த்தோம்; நாம் நம்பிய அமைச்சர்கள் வெறும் சோற்றாலடித்த பிண்டங்கள் என்பதை தெளிவாக உணர்ந்து "இவர்கள் யார்; எங்கள்மொழி எங்கள் நாடு" என்ற வீரிட்ட உணர்ச்சியோடு கூடினோம், எழுந்தோம்; பிழைத்தோம்! ஆனால் இன்று நமது நிதியமைச்சர் சுப்பிரமணியம், நமது விடுதலை வேட்கைக்கும், மொழிப் பற்றுக்கும் வேறுபாடு தெரிவித்து, வேட்டு வைத்து தில்லி தேவ புருஷர்களின் காலைப் பிடித்து அவர்களின் மனதைத் திருப்திப்படுத்த முயலுகிறார்.

தமிழும், ஆங்கிலமும் தவிர வேறு ஏதாவது ஒருமொழியை நாம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறார், அவர் வாதப்படியே நாம் மற்றொரு மொழியைக் கற்றுக் கொள்வோம். ஆனால் அந்த மொழி தெலுங்காகவோ, மலையாளமாகவோ, கன்னடமாகவோ இருக்கட்டும். நாம் கற்றுக் கொள்ள தயாராக இருப்போம். வீடு வீடாகச் சென்று நாம் பிரச்சாரம் செய்வோம்; "கற்றுக் கொள்ளுங்கள், உங்களின் திராவிட மொழிகளில்

(12ம் பக்கம் பார்க்க)

துணிவில்லை ! — தைரியமில்லை ! திராணியில்லை !

★★★

சேது சமுத்திரத் திட்டம் உண்டா, இல்லையா?—இதைப் பொறுத்துத்தான் உங்கள் திறமையை, நாணயத்தை சக்தியை, போராடும் ஆற்றலை நாட்டுமக்கள் தீர்மானிக்க இருக்கிறார்கள்.

தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்தைப் பற்றிவிவாதிக்க இன்னும் என்ன இருக்கிறது?தலை சிறந்த நிபுணர் என்று மதிக்கப்படும் டாக்டர் ஏ. இராமசாமி (முதலியார்) அவர்களையே அனுப்பி சேதுசமுத்திரத் திட்டத்தை ஆராயச் செய்த பிறகு, அதை நிறைவேற்ற என்ன தடையிருக்கிறது?

இந்தத் திட்டத்தை நீங்கள் நிறைவேற்றப்போகிறீர்களா? அல்லது நாங்கள் பதவியிலிருந்து விலகவா—என்று நமது அமைச்சர்கள் துணிந்து மத்திய அரசாங்கத்தைக் கேட்க வேண்டும்.

வங்காளத்து முதலமைச்சர் சுதந்தர நாளைத் துக்க நாளாகக் கொண்டாடத் துணியவில்லையா? வங்காளியர்களுக்குள்ள துணிவு நமது அமைச்சர்களுக்கு இல்லையா?

சுதந்தரப் போராட்டக் காலத்தில் வங்காளிகளும் நீங்களும் சிறையில் ஒன்றாக இருந்திருக்கக்கூடும். அவர்களுக்கிருக்கும் துணிவு ஏன் உங்களுக்கு வரவில்லை? ஏன் உங்களுக்கு நடுக்கம்? உங்களுக்கு முதுகு எலும்பு இல்லையா?

நிதியமைச்சர், இங்கே முன்பு எதற்கோ, ஏசுநாதரைச் சுட்டிக்காட்டினார். நானும் அதே ஏசுநாதரின் பொன் மொழிகளைநினைவுபடுத்துகிறேன்.

தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப் படும் என்பதுதான் அந்தப் பொன்மொழி; நீங்கள் தட்ட மறுக்கிறீர்கள் — திறக்கவில்லை ! 'கதவு திறக்குமா' என்று பார்த்து, திறந்தவுடன் பரபரப்பாக நுழைபப் பார்க்கிறீர்கள்; அது (டெல்லி) இரும்புக்கதவு! உங்கள் கரம் தேய்ந்து இளைத்திருப்பதால் அதைத் திறக்கத் திராணி இல்லை!

சட்டமன்றத்தில் அறிஞர் அண்ணா.

ஈனச் செயல், பலாத்காரம், காலித்தனங்கள் இனி செல்லாது !

தொட்டால் சிணுங்கிகள் தோள்தட்டி ஆர்ப்பாட்டம் செய்வதா?

நிலைமை வளர்ந்தால் அதற்கும் முற்றுப் புள்ளி வைப்பேம் !

சம்பத் பேச்சு

(3ம் பக்கத் தொடர்ச்சி

பலமான தொல்லைகளைக் கொடுத்தார்கள். நாம் திராவிட முன்னேற்றக் கழகமாகப் பிரிந்தபின்னும் நமக்குக் கடும் தொல்லைகள் தந்தார்கள். நம்முடைய தோழர்களை உயிரிழக்கச் செய்தார்கள். நாம் அதனுலெல்லாம் அழிந்து விடவில்லை. ஒழிந்து விடவில்லை மாருக வளர்ந்து தான் வருகிரேம். இன்று நாம் அடைந்துள்ள வளர்ச்சியைவிட வேறு எவராலும் இந்தக் குறுகிய காலத்தில் வளர்ச்சியடைய முடியாது.

நாம் நம்முடைய ஜீவதார இலட்சியங்களை அடைவதற்கான பெரிய முயற்சியில் கவனம் செலுத்தி வெற்றி கிடைக்கும் நிலையில் இருந்து வருகிரேம். இதிலிருந்து நம்முடைய கவனத்தை வேறு வழியில்திருப்பிவிடச் செய்யும் தந்திரங்களே இவர்கள் இன்று செய்யும் பலாத்காரச் செயல்கள். குடந்தையிலும், மற்றும் பல பகுதிகளிலும் நடைபெற்று வருகின்ற ஈனச் செயல்களைப் பற்றி — காங்கிரஸ்காரர்கள் கையாண்டு வருகின்ற காலித்தனங்கள்பற்றி நாங்கள் சிந்திக்காமலில்லை, அதைப் பற்றி யோசிக்காமலில்லை. அதை பற்றிச் சிந்தித்துத்தான் வருகிரேம். அது எந்த அளவிற்குப் போகிறது என்பதைப் பார்த்துத்தான் வருகிரேம்.

இந்த நிலை தொடர்ந்து நீடிக்குமானல் அதற்கு ஒருமுற்றுப்புள்ளி வைக்கத்தான் போகிரேம். தங்களிடம் அரசியல் அதிகாரம் இருக்கிறது என்ற ஆணவத்தால் இந்தமாதிரி இழிவுப்பதையில் சென்று கொண்டிருக்கிருர்கள். அவர்கள் மிகவும் சிறுபான்மையினர். விரல்விட்டு எண்ணக் கூடிய நிலையிலுள்ளவர்கள் அவர்களால் நம்மைஒன்றும் செய்து விடமுடியாது. இப்படிப்பட்ட நிலைமைகள் அரசியல் வரலாற்றில் மிகவும் சாதாரனமானது இதில் வரவு செலவுக்கணக்குகள் பார்க்கக்கூடாது. இன்றுநமக்கு நட்டமென்ருல், நாளை அவர்களுக்கும் நட்ட மேற்படத்தான் செய்யும். இதைப்பற்றி அவர்கள் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கவோ, நாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கவோ கூடாது— நாம் எதையும் நிதானமாகத்தான் செய்யவேண்டும், எதிலும் அவசரப்படவேகூடாது.

நான்ஆரம்பத்தில் பேசும்போது கூறினேன், எனக்குமுன் பேசியவர்கள் மிகநன்ருக—அழகாகப் பேசினுர்கள் என்று. இதுநான் வெறும் சம்பிரதாயத்திற்காக—அவர்களைப் புகழ்வதற்காகக் கூறவில்லை. உண்மையிலேயே அவர்கள் பேச்சில்கண்ட கருத்துக்களை, விளக்கங்களைக்கேட்டேகூறுகிறேன்.

நண்பர்கள் ஆதி, பாண்டியன், அகிலன் இவர்கள் பேசியபேச்சுக்கள் மிகவும் பாராட்டுதற்குரியதாகவும், நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியதாகவுமிருந்தது.

ஜே !
கடங்காரி பாரதமாதாவுக்கு 'டபுள் ஜே !!

★

சுதந்திரம் பெற்ற பனிரெண்டு ஆண்டுகளில் பாரத மாதா மகத்தான முன்னேற்றம் அடைந்துவிட்டாள் ! அடடா சொல்ல முடியாத முன்னேற்றமடைந்துவிட்டாள் ! ஆமாம் ; கடன் வாங்குவதில் இமாசல முன்னேற்றமடைந்துவிட்டாள்!

முதல் ஐந்தாண்டுத் திட்டம் துவங்கியதிலிருந்து இன்று வரை இந்தியாவின் 'சட்டி தூக்கிய' கைங்கர்யத்தினல் கிடைத்த ரூபாய் 1658.07 கோடி !

இதில் மானியம் 342.13 கோடி ரூபாய்.
பாக்கி 1315.94 கோடி ரூபாய் கடன் !

அந்நியச் செலாவணி கடனில் :—	கோடி
அமெரிக்காவிற்குக் கொடுக்கவேண்டிய	ரூ. 167.64
ரஷ்யாவிற்குக் கொடுக்கவேண்டிய	ரூ. 144.03
பிரிட்டனுக்குக் கொடுக்கவேண்டிய	ரூ. 115.99
மேற்கு ஜெர்மனிக்குக் கொடுக்கவேண்டிய	ரூ. 107.77
கனடாவிற்குக் கொடுக்கவேண்டிய	ரூ. 15.72
ஜப்பானுக்குக் கொடுக்கவேண்டிய	ரூ. 27.62
ஸ்விட்சர்லாந்திற்குக் கொடுக்கவேண்டிய	ரூ. 10.90

வாழ்க! அன்னக் காவடி பாரதமாதா அடியோடு வாழ்க !

நண்பர் ஆதி அவர்கள் பேச்சில் இந்திய சர்க்காரின் மூன்று ஐந்தாண்டுத்திட்டத்தைப் பற்றியும், தேசியவருமனத்தில் நடைபெறும் ஊழல்கள் பற்றியும், பெரிய, பெரிய பணக்காரர்கள், தொழிலதிபர்கள் செய்துவரும் ஏமாற்றங்களைப்பற்றியும் மிகவும் விளக்கமாகப் பேசினுர்,

சமீபத்தில் பாராளுமன்றத்தில் பண்டித நேரு, மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி 70 நிமிடங்கள் பேசினுர். அவரது பேச்சில் "மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்னென்ன இடம் பெற்றிருக்கிறது என்பதைப் பற்றியோ அதிலடங்கியுள்ள பல திட்டங்களைப்பற்றியோ ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை! ஆனல் அவருடைய பேச்சில் காணப்பட்டதெல்லாம், இரண்டு ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் இந்த நாட்டின் தேசிய வருமானம் 42 சதவிகிதம் உயர்ந்திருக்கிறதென்றும், அதிகமாக வந்திருக்கும் அந்த 42 சதவிகிதம் எங்கே போயிருக்கிறது? என்னவாயிற்று? என்பதை அறிந்து கொள்ள முடியவில்லையென்றும், 1952ம் ஆண்டு இருந்ததைவிட நமதுவருமானம் மிகவும் உயர்ந்திருக்கிறது என்றும் ஆனல் அது எங்கு போயிற்று என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றும், அதைத் தெரிந்துகொள்வதற்காக மீண்டும் ஒரு நிபுணர் குழு அமைக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

நாட்டில் நல்ல நிலைமைகள் உருவாகி நாட்டுமக்களெல்லாம் நல்ல விதமாக, சுபீட்சமாக—வளமாக வாழவேண்டுமென்பதற்காகத்தான் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. திட்டங்கள் மூலம் வரும் வருமானங்களைக் கொண்டு மக்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து கொடுத்து அவர்கள் இன்பமாக வாழுவதற்கான வழிவகைகளைச் செய்வதுதான் அரசினரின் நோக்கம் ஆனல் இன்று இங்கு அந்த மாதிரியான நிலை ஏற்படவில்லை.

நாட்டில் அதிகரித்து வரும் வருமானம் நாட்டுமக்களுக்குப்

(அடுத்த பக்கம் பார்க்க)

பண முட்டைகள் அரசியலாருக்கு பணம் செலுத்தாமல் மோசடி செய்யக் காரணம் என்ன ?

நிர்வாக ஊழல்களும், திறமையற்ற செயல்களும், லஞ்சத் தாண்டவமும், அரசாங்கத்திலுள்ளவர்களின் பித்தலாட்டங்களும், காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரத்திற்கு பணமுட்டைகளிடம் நன்கொடை பெறுவதுமே மோசடிக்குக் காரணம் !

(முன்பக்கத் தொடர்ச்சி)

பயன்படவில்லை. பெரும் பணம் படைத்த செல்வந்தர்களின் பெட்டிகளில் போய் பதுங்கிக்கொள்கிறது. இன்று பலபித்தலாட்டங்களும், ஏமாற்றுச்செயல்களும் நடைபெற்று வருகிறது. இந்த வருமானங்களால் மக்களுக்கு நன்மை கிடைக்குமென்று கூறுவது கானல்நீரைப் போன்றதுதான்.

இந்த நாட்டில் 1946ம் ஆண்டிலும், 47ம் ஆண்டிலும் வருமானம் என்கின்றவகையில் நேரிடையாகக்கிடைத்து வந்தவருவாய்தான் இன்றும் கிடைத்து வருகிறது.

இன்று நாட்டில் பெரும், பெரும் தொழில்கள் அபிவிருத்தியடைந்து இருந்தும் அதே வருமானம் கிடைத்து வருகிறதென்றால் அதன் பொருளென்ன ? இன்றைய தினம் பல கோடிக் கணக்கான ரூபாய்களை பல பணக்காரர்கள், தொழிலதிபர்கள், செல்வந்தர்கள் சர்க்காருக்குப் பணம் செலுத்தாமல் ஏமாற்றி வருகிறார்கள் என்பதைத்தான் நாம் உணர முடிகிறது.

இது சர்க்காருக்குத் தெரியமாலிருக்கிறதா என்றால் அவர்களுக்குத்தெரிந்துதான் இருக்கிறது. அவர்களே கூறுகிறார்கள் இன்று நாட்டில் தொழிலபிவிருத்தி அதிகம்என்று. அப்படி இருந்தும் அரசினருக்கு ஏன் பழையவருமானமே கிடைத்து வருகிறது. அதன் காரணம் என்ன ?

இன்றைய தினம் பல பணம் படைத்தவர்கள் அரசியலாருக்குப் பணம் செலுத்தாமல் மோசடிசெய்து வருகிறார்களென்றால், அது அவர்களது சாமர்த்தியத்தாலல்ல. இன்று அரசாங்கத்திலுள்ளவர்களின் நிர்வாக ஊழல்களாலும், திறமையற்ற செயல்களாலும், லஞ்சம் தாண்டவமாடுவதாலும், அரசாங்கத்திலுள்ளவர் பலரும் பித்தலாட்டங்கள் செய்து வருவதாலும் பல முதலாளிகள் பெரும் லாபம் சம்பாதித்து வருகிறார்கள். அரசாங்கத்தையே ஏமாற்றி வருகிறார்கள்.

இதை ஆளுபவர்கள் அறியமாட்டார்களா என்றால் அறிவார்கள் அறிந்தும் ஏன் சும்மா இருக்கிறார்களென்றால், அரசினரும் சேர்ந்து பொதுமக்களை ஏமாற்றி வருகிறார்கள் என்பதுதான் பொருள். இன்று அரசினரை ஏமாற்றி வரும் பணம் சர்க்காரிடம் சென்றால் அது மக்கள் நலனுக்காகப் பயன்படும்.

இன்று நமது நாட்டிலுள்ள வருமான வரி சட்டப்படி ஒருவன் 10 இலட்சத்திற்குமேல் சம்பாதிக்க முடியாது. ஒருவன் குறிப்பிட்ட தொகைக்கு மேல் வருமானம் வருவதாக இருந்தால் ரூபாயுக்கு 0-8-0 அணு, 10 அணு, 12 அணு பதினைந்தே முக்காலணு வரை அவன் வருமானவரி செலுத்தியாக வேண்டும். இந்த சட்டப்படி பார்த்தால் எந்த வியாபாரியாலும் தொழிலதிபராலும் 10 இலட்சத்திற்குமேல் சம்பாதிக்க முடியாது.

ஆனால் இன்று சென்னைநகரில் மட்டும் பல பணக்காரர்கள கோடிக் கணக்கான ரூபாய்கள் சம்பாதித்திருக்கிறார்களே அது எப்படி முடிந்தது அவர்களுக்கு அவ்வளவு பெருந் தொகை எவ்வாறு கிடைத்தது? இதை அரசினர் யோசித்துப் பார்த்தார்களா ? இதையெல்லாம் விசாரணை செய்து அதைக் கண்டு பிடிப்பதற்கு தைரியமிருக்கிறதா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இன்று பலர் புதிதாகச் சொத்துக்கள் வாங்கி இருக்கிறார்களே அது எப்படி ?

இந்த நாட்டில் இதுபோல பல மோசடிகள் நடைபெற்று வருகிறது. இதைக் கண்டு பிடிக்க இந்த அரசினரால் முடியவில்லை பல மோசடிகளில் சம்பந்தப்பட்டிருந்த முந்திரா என்ற வடநாட்டு முதலாளி இந்த அரசினரை வருமான வரியை பல வழிகளில் ஏமாற்றி வந்திருக்கிறார், அவர் பல பெயரால் கம்பெனிகளை அமைத்து வருமானத்தைப் பிரித்துக் காட்டி ஏமாற்றி வருகிறார்.

முந்திரா கூறுகிறார் "நான் காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரத்திற்காக 2 லட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறேன்" என்று. இதை நேருவோ, மற்றவர்களோ மறுப்பதற்கு யோக்கியதை இல்லை. முந்திராவின் ஊழல்களை விசாரணை நடத்திய உயர்நீதி மன்ற நீதிபதி அவர்கள் "முந்திராவின் ஊழல்களின் ஆரம்பமே காங்கிரசுக்கு நன்கொடைகொடுத்ததிலிருந்துதான் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதை பண்டித நேருவிடம் ஒரு பத்திரிகை நிருபர் காட்டிய போது அவரைக் கடுமையாகத் தாக்கியதுடன், அவரை முட்டாள் என்றும் திட்டியிருக்

பாரத புத்திரர்களின் துரைத்தன லட்சணம்

★★★

பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர்
<u>**கால்டாஸ்**</u>

அம்பலப்படுத்துகிறார் !

ரூ. 300 கோடி

பணமுதலைகளால் ஸ்வாகா !!

எப்படிப் போயிற்று ? யாரால் போயிற்று ?

துரைத்தன 'தூங்கு மூஞ்சி'களே விளக்குவீர்களா ?

பாராளுமன்றத்தில் நான் பேசினுல் கூச்சல் போடும் வடவர்கள் இப்பொழுது கூர்ந்து கவனிக்கிருர்கள் !

கிருர், மேலும் அந்த நீதிபதி பலமுறை நன்கொடையாகக் கொடுத்த பணத்தைக் கூட்டி இரண்டு கோடி என்று கூறி விட்டார். அவர் அவ்வாறு கூறியதைப்பற்றி தாக்கியிருக்கிருரே தவிர, நீதிபதி கூறிய தொகையை மறுக்கவில்லை.

இந்த நாட்டிலுள்ள பல பணக்காரர்கள் காங்கிரசுக்குப் பணம் தந்திருக்கிருர்கள். ஏன் அவர்கள் அப்படிப் டணம் தருகிருர்கள்? காங்கிரசுக்குப் பணம் கொடுத்தால் அடுத்த ஜன்மத்தில் நல்ல கதி கிடைககுமென்று கொடுக்கிருர்களா? பின் ஏன் கொடுக்கிருர்கள்? வியாபாரங்களில் கொள்ளை லாபம் அடிக்கலாம் என்று கருதியே கொடுக்கிருர்கள். கள்ள மார்க்கெட்டில் பணம் சம்பாதிக்க இம்மாதிரியான ஊழல் மயம் சர்க்காரில் மலிந்து கிடக்கிறது. அது புழுப்போல் நெளிந்துகொண்டு வருகிறது.

திராவிடமுன்னேற்றக் கழகம் இன்று நாட்டின் அரசியலில் ஒரு புதுமையையும், ஒரு விழிப்பையும் உண்டாக்கி வருகிறது. நாம் நமது கொள்கையில், நமது இலட்சியங்களில், நமது முடிவுகளில் வெற்றி பெற்ருேமா இல்லையா என்பதைப் பற்றி நாம் இங்கு பேசிக்கொண்டிருக்கத் தேவையில்லை, அப்படிப் பேசுவது தேவையற்றது. அவசியமற்றது. நாம் அரசியலில் மிகவும் சாமானியர்கள், அப்பாவிகள், நாம் செல்வாக்கற்றவர்கள். இப்படிப் பட்டவர்களைப் பற்றித்தான் சட்டமன்றத்தில் பேசும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

நான் சென்னை சட்டமன்றத்திற்கு கவர்னர் உரையின்மீது நடந்த விவாதத்தின்போது சென்றிருந்தேன். அங்கு சட்டமன்ற உறுப்பினர்கள் ஆற்றியுள்ள பேச்சுக்களை நீங்கள் படித்துப் பார்க்க வேண்டும்.

பண்டித நேருவும், பண்டித பந்துவும். குடியரசுத தலைவரும் மொழிப் பிரச்சினையில் நாம் கேட்டிருந்த வாக்குறுதியைக் கொடுத்திருந்தார்கள்.

இந்த வெற்றிநமக்குக் கிடைத்தவுடன் உடனே நான் டெலலிக்குச் செல்லாது சென்னையில் தங்கினேன். தொடர்ந்து நான் கைந்து நாட்கள் சட்டசபை நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காகச் சென்றிருந்தேன். அங்கு நடந்த நடவடிக்கைகளைப் பார்வையாளனுக இருந்து கவனித்து வந்தேன். அங்கு என்ன நடந்தது? அங்கு பேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் நம்மைப் பற்றித்தான் பேசினுர்கள்.

வேதாரண்யம் திரு வேதரத்தினம் பேசும்போது குறிப்பிட்டார். "தி. மு. கழகத்தைக் கண்டு இங்குள்ள அரசினர் பயப்படுகிருர்கள். அவர்களைக் கண்டு தொடைநடுங்குகிருர்கள் அவர்கள் வளர்வதற்கு அரசினரே காரணம்" என்ற முறையில் பேசினுர்.

மற்றும் சிலர் "இந்த தி. மு. கழகத்தாருக்கு பண்டித நேருவும், பந்தவும், குடியரசுத் தலைவரும் பதில கொடுக்க வேண்டியதில்லை. நமது நிதியமைச்சரின் வாக்குறுதியே போதும்; இப்படியெல்லாம் பெரும் தலைவர்கள் அவர்களைப் பற்றிப் பேசுவதால் தான் அவர்களுக்குச் செல்வாக்கு ஏற்படுகிறது" என்றும் பேசினுர்கள்.

இதிலிருந்துஎன்ன தெரிகிறது? நாம் வெற்றி பெற்ருேமா? தோல்வி யடைந்தோமா என்பதை நீங்களே சிந்தித்துபபார்க்கும்படி வேண்டுகிறேன்.

இவர்கள் பேசியதிலிருந்து எது பிரதிபலிக்கிறது என்பதையம், எது எதிரொலிக்கிறதென்பதையும் கேட்டாலேயே போதும்.

நான் இந்தநிகழ்ச்சிகள் நடந்த பின் டெல்லிக்குச் சென்றேன். அங்கு நடப்பவைகளைக் கூர்ந்து கவனித்தேன்

அரசியலில் நாங்கள் புதியவர்களல்ல. காங்கிரஸ்காரர்கள் எண்ணுகின்றபடி அரசியல்அறியாத அப்பாவிகள் அல்ல! பலவற்றையும் உணர்ந்தே — அறிந்தே காரியங்கள் ஆற்றிவருகிருேம். எங்களைப்பல வகையிலும் கேலியும் கிண்டலும்செய்கின்ற முறையில் எங்களை அழித்துவிடஎண்ணினுல் செல்வாக்கைக் குறைக்க எணணினுல் அவர்கள் ஏமாறத்தான் போகிருர்கள்.

உங்களுக்கு ஒரு விஷயத்தைக் கூற ஆசைப்படுகிறேன். இந்தியாவிலிருந்து வெளி வருகின்ற பத்திரிகைகளிலெல்லாம் நம்மைப் பற்றியும் நமது நிகழ்ச்சிகளைப் பற்றியும்தான் எழுதி வருகின்றன. அங்குள்ள பத்திரிகைகளில்வெளிவரும்கேலிச் சித்திரங்களும் முன்னேற்றக் கழகத்தைப் பற்றியதாகத்தான் இருக்கிறது.

கோடம்பாக்கம் மாநாட்டிற்குப் பின், டெல்லியில் இந்த முறை நான் பல புதுமைகளைக் கண்டேன்.

அங்கு என்னை அலட்சியப் படுத்தியவர்களும், வேறு கண்ணேடு பார்த்தவர்களெல்லாம் வலிய வந்து அன்போடு பேச வந்தார்கள். நான் பேசுவதையே கேட்க மறுத்தவர்கள் "தெனனுட்டை வடநாடு புறக்கணிக்கிறது என்பதை ஒப்புக்கொள்வதாகவும், ஆனுல் பிரிந்துப்போவதை மட்டும் ஒப்புக்கொள்ளவில்லை" யென்றும் சொன்னுர்கள்.

நான் மக்கள் சபையில் பேசுகின்ற நேரத்தில், எலனைப் பேசவிடாது குறுக்கிட்டு கத்தியவர்கள், கலாட்டா செய்தவர்கள் நான் பேசும்போது என்ன பேசுகிறேன் என்பதைக் கூர்ந்து கவனித்து வந்தார்கள்.

பண்டித கோவிந்த வல்லப பந்த் உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகட்கெல்லாம் இந்தியிலேயே பதில் சொல்லி வந்தா.

அப்பொழுது நான் எழுந்தேன். இந்தியிலே பதிலளித்துக் கொண்டிருந்த பந்தவை நோக்கிக்கேட்டேன்; "நீங்கள் இந்தியிலேயே பதிலளித்துக் கொண்டிருந்தால், இந்தி தெரியாத நாங்கள் எப்படிப் புரிந்து கொள்வது?" என்று! அமைச்சர் பந்த், இதற்கு முன் நான் எப்போதாவது குறுக்கிட்டுக் கேட்டால் சீறி விழுவார்; அடங்காத கோபத்தால் ஏதேதோ பேசுவார். ஆனுல் பந்த் இம்முறை மிகமிகப் பணிந்தார். பதிலை மட்டுமல்ல; பதிலுக்குரிய கேள்வியையும் வெகு அழகாக ஆங்கிலத்திலே எடுத்து விளக்கினுர். இது மக்கள் சபையையே ஒரு பெரும் பேராச்சரியத்தில் மூழ்கடித்தது. இதற்குக் காரணம் என்ன? எல்லாம் "கோடம்பாக்கம்' கொடுத்த அடிவயிற்றுப் பீதிதான்!

மேலும் மக்கள் சபையில் இம்முறைநடைபெற்ற ஒரு பிரச்சினையை உங்களுக்குச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். மக்கள் சபையில் இம்முறை 'பஞ்சாபி சுபா' வைப்பற்றி பலத்த வாக்குவாதம் நிகழ்ந்தது. நேரு பெருமான்எழுத்து, தனது திரு

(8ம் பக்கம் பார்க்க)

எச்சரிக்கை – பயமுறுத்தல் !

★★★

"அஸ்சாம் மாநிலத்தில் நடைபெற்ற மொழிக்கிளர்ச்சியின்போது போலீஸ் உயர்தர அதிகாரிகள் கடமையுணர்ச்சியோடு பணி புரியவில்லை" என காரணம் காட்டி அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. போலீஸ் உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த மாநில சர்க்கார் அறிவித்திருககிறது!

அஸ்சாம் மக்கள் நடத்திய மொழிக் கிளர்ச்சியை போலீஸ் அதிகாரிகள் அடக்கவில்லை, ஒடுக்கவில்லை, திறமையோடு வேலை செய்யவில்லை" என்பதே இந்த நடவடிக்கைகளுக்குக் காரணமாகும்!

மொழிபற்றுக் கொண்ட மக்களின் உணர்ச்சிப் பிரவாகததைத் தடிகொண்டோ, துப்பாக்கியால் சுட்டோ பிணமலைகளைக் குவித்துக் காட்டியோ அடக்கவிட முடியாது! இதை ஆட்சியாளர்கள் அனுபவ பூர்வமாகவே அறிவார்கள்! அப்படி இருந்தும் நடவடிககை எடுக்கக் காரணமென்ன?

"இனி எங்கெங்கு மொழிக் கிளர்ச்சி நடந்தாலும், எங்கெங்கு விடுதலைப் போராட்டங்கள் நடந்தாலும் அதை எப்பாடுபடடேனும், உயிரைத் தத்தம் செய்து கொடுத்தேனும் போலீஸ் அதிகாரிகள் அடக்க வேண்டும். இல்லாவிட்டால் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள், நடவடிக்கை எடுக்கப்படுவார்கள்" என்று எச்சரிக்கை செய்வதற்கே, பயமுறுத்துவதற்கே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது!

விடுதலை வீரர்களை மிரட்டிப் பார்த்தார்கள், அடித்துப் பார்த்தார்கள்; உதைத்துப் பார்த்தார்கள்; சிறையிலே தள்ளிப் பார்த்தார்கள்! என்ருலும உணர்ச்சிப் பெருக்கைக் கட்டுப்படுத்த முடியவில்லை! எனவே போலீஸ் அதிகாரிகள் மீது பாயத தொடங்கிவிட்டார்கள்! இனி போராட்டங்களை அடக்காவிட்டால்—அஸ்சாம் போலீஸ் அதிகாரிகளுக்கு ஏற்பட்ட கதிதான் ஏற்படும் எனறு எடுக்கப்பட்ட நடவடிக்கையின் வாயிலாக எச்சரித்திருக்கிருர்கள்!

எத்தனைக் காலத்திற்குதான் இந்த நிலை நீடிக்குமோ? யார் கண்டார்கள்?

Registered as a Newspaper in CEYLON
வெளிநாடு 20 சதம்
Regd.No.M. 7074 **MALAIMANI** விலை 16 காசு Phone 83285

நிதிமந்திரி சுப்பிரமணியத்தின் ஐரோப்பியப் பிரயாணம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வேறுபட்ட அமெரிக்காவிலிருந்து கார்களை இறக்குமதி செய்யலாம், வேறுபட்ட ஆங்கில நாட்டிலிருந்து கார்களை இறக்குமதி செய்யலாம, வேறுபட்ட ஜப்பானிலிருந்து நவீன பொருள்களை வரவழைக்கலாம்! வேறுபட்ட திராவிடத்திலிருந்து மட்டும் கார்களை வடநாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடாதா? துண்டு பட்டால் பகையோடுதான் வாழ வேண்டுமா? அப்படியானால் இன்று வெள்ளைக் காரர்களின் நாட்டிற்குநமது நிதி அமைச்சர் சென்றிருக்கவே கூடாதே! "அவன் மாற்றான், அவன் வேற்றான்" என்று பகையுணர்ச்சியை அல்லவா வளர்க்க வேண்டும்!

நமது நிதி அமைச்சர் படித்தவர், பட்டம் பெற்றவர், சட்டம் பயின்றவர், ஆட்சி பீடத்திலிருந்து அனுபவ அறிவைப் பெற்றவர்! எனவே இவர் இப்படிப் பேசுவது அவருடைய நிலைக்கு முற்றிலும் சரியல்ல! இதுவரை தெரிந்தோ தெரியாமலோ இப்படிப் பேசி இருந்தாலும் இனியேனும் இப்படிப் பேச மாட்டார் என்றே நம்புகிறோம்!

அவரது ஐரோப்பாக் கண்டத்தின் சுற்றுப் பிரயாணம் நிச்சயமாக ஒரு மனமாற்றத்தை அளிக்குமென்றே எண்ணுகிறோம்! சின்னஞ் சிறிய நாடுகள் சிங்காரமாக வாழ்வதைக் கண் கூடாகக் கணடவருக்கு ஏன் இந்த மனமாற்றம் ஏற்படக் கூடாது? படித்தவர், எதையும் பகுத்துணர்ந்துப் பார்க்கும் சக்தி படைத்தவர் என்பதால் அவர் திருந்துவார் என்ற நம்பிக்கை திடமாக இருக்கிறது!

சிறு, சிறு நாடுகளாக சிதறுண்டு கிடக்கும் ஐரோப்பா எத்தனையோ செழிப்போடு இருக்கிறது, எத்தனையோ வளத்தோடு நிற்கிறது! ஒன்றுபட்டுக் கிடக்கும் நாமே-நீண்டு அகன்றுக் கிடக்கும் மிகப் பெரிய நிலப்பரப்பை வைத்துக் கொண்டு கிடக்கும் நாமே ஐரோப்பியர்களிடம் பிச்சைக் கேட்கிறோம்!

பிரிந்தால்தான் வாழமுடியும்—பிரிந்த காரணத்தால் தான் நாங்களும் வாழ்கிறோம்'' என்பதை ஐரோப்பாக் கண்டம் நமது நிதி அமைச்சருக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லி அனுப்பி வைக்கும் என்பதில் கொஞ்சமும் சந்தேகமிருக்காது!

குழம்பிய மனதோடு செல்லும் நிதி அமைச்சர் தெளிவு பெற்று, அரசியல் அறிவு பெற்று, மொழிப் பற்ருேடு, நாட்டுப் பற்றையும் பெற்று திரும்பி வருவாராக; திருவிடத்தை அமைக்கத் திரும்பி வருவாராக!○

★

(8ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை தாராளமாகக் கற்றுக் கொள்ளுங்கள்'' என்று நாமே மக்களிடையே கூறுவோம்.

இதைச் செய்யாமல் இந்த மோசமான நிலையில்இந்தியைப் புகுத்துகிறீர்கள். பலவந்தமாகப் புகுத்துகிறீர்கள். படித்துவிட்ட பிறகு பல்லை இளிப்பீர்கள் "நீங்கள் தான் படித்து விட்டீர்களே, ஏன் எதிர்க்கிறீர்கள்?'' என்று! ஆகவேதான் நாம் இந்தியின் ஒரு எழுத்தைக் கூட படிக்கக் கூடாது என்று ஆணித்தரமாகச் சொல்ல ஆசைப்படுபடுகிறேன். நான் இப்படிச் சொல்வதினுல் எனக்கு இந்தி மொழியின் மீது வெறுப்பு—மொழி வெறி இருக்கிறதென்று எண்ண வேண்டாம். அரசியல் ஆதிக்கம்—வடவர்களின் ஆணவக் கொட்டம் ஏற்படாமல் இருக்க வேண்டுமானுல் இதைவிட சிறந்த வழி வேறு எதுவும் இருக்க முடியாது என்பதற்காகவே சொல்லுகிறேன்.

இந்த நேரத்தில் நிதி அமைச்சரின் வாதம் பொருளுடையதாக எனக்குப் படவில்லை. அவர் வாதத்தைக் கவனித்தால் 'சிறுபிள்ளைத்தனம்' என்றுகூறி ஒதுக்கித் தள்ளுவதைத் தவிர செயல்படத் தக்கது என்று எடுத்துக் கொள்ள எதுவுமில்லை என்று கூறிக் கொண்டு உங்களுக்கு என் நன்றியை தெரிவித்து விடைபெறுகிறேன்.

வணக்கம்.

நெஞ்சில் கலந்தவள்!

★ பானுதாசன் ★

ஆசை கொண்ட ஒருமங்கை அருகேவந்தாள்
அழகான தன்கரத்தைநீட்டி என்மேல்
பாசமுடன் தொட்டுப்பின் பாகே என்ருள்
பவழஇதழ் விரித்து மெல்ல அத்தான் என்ருள்!
மயங்கிட்ட என்நெஞ்சில் அந்த மங்கை
காதல் மயக்கத்தால் தலைசாய்த்தாள்; அணைத்தாள் நானே
போதையிலே உடல்மறந்தேன்; உள்ளம்இழந்தேன்
பூமியிலே வாழுகின்ற நினைவேமறந்தேன்! ஆகா
காதையிலே, கவிதையிலே காணும் இன்பம் அடடா
கோதையவள் விழிக்கூட்டில் ஊறும் தேனுய்!
குலைவாழை, பலாக்கனியும், கொம்புத் தேனும்
கோதுபடா மாங்கனியும், கொய்யா சுவையும்
மலைக்கரும்பும், நல்லமுதும், மணக்கும்பாலும்
மாணிக்கச் சுடரொளியே! மாதே! நீயும்
காணிக்கை தரும் அந்தமுத்தம் ஆமோ? ஓகோ [கன்னத்தில்
பதித்திட்ட வைரக்கட்டி! வண்ண வானத்தில்
உதித்திட்ட நிலவுக்கட்டி! எண்ணத்தில் நீயோ
ஒளிதங்கக்கட்டி! இதயத்தில்நீயோ ஒருநாதப்பெட்டி!
நிலவினிலோ உன்விழிதான் மணிவிளக்கு! நீள்வான
கடலினிலோ உன்விழிதான் தாரகையாம்! உதயத்தின்
ஒளிவெடிப்பு உன்தன்சிரிப்பு! உலகத்தின் நாதமழை
உன்தன்சொற்கள்! பனிமலரின் இளஞ்சிரிப்பு
உன்தன் மேனி! பாவையே நீதானே அழகின்வித்து!
சித்திரத்தின் கருப்பொருளே! ஜெகத்தில் நல்ல
சிற்பத்தின் ஒருருவே! நீதான் அழகி!
முத்தென்ன ஒளிவீசும் பற்களிடையே முறுவலிக்கும்
உன்இதழ்தான் உயிரின்வெல்லம்! மோகனமே
உன்முத்தம் கவிதை ஊற்று! முழுநிலவே
உன்அணைப்பு இன்பக் காற்று! முத்தழகே
உன் மொழியோ சந்தனச்சேறு! முகில்குன்றே
நீ யோதான் பழத்தின் சாறு! மணமுல்லை
உனைவெல்வார் உண்டோகூறு! மாங்குயிலே
மரகதமே! மாதோநீதான் மணித்தேரின்
கலையழகோ? மானே? சொல்வாய்!

திருமண அழைப்பிதழ்

★★★

18—9—60 ஞாயிறு காலை 9-மணி அளவில் திரு. இராமலிங்கம் அவர்களின் குமாரனும், திரு. சி. ஆர். பாலசுந்தரம் அவர்களின் சகோதரருமான

திரு. வானவரம்பனுக்கும் (கஜேந்திரன்)

"மாலை மணி" துணை ஆசிரியர் திரு. A. சங்கரய்யா அவர்களின் புதல்வி

திருமதி நாகம்மாளுக்கும்

நாவலர் **இரா. நெடுஞ்செழியன்** அவர்கள் தலைமையில் சென்னை நுங்கம்பாக்கம், அவின்யூ சாலை, 9-ம் எண்ணுள்ள இல்லத்தில் (அண்ணு அவர்கள் இல்லம்) திருமணம் நடைபெறும். அன்பர்கள் அனைவரும் வந்திருந்து திருமணத்தை சிறப்பிக்கவேண்டுகிறோம்.

தங்கள் அன்புள்ள,

சி. ஆர். பாலசுந்தரம்	சி. என். அண்ணுதுரை
(சென்னை நகர மன்ற உறுப்பினர்)	இராணி அண்ணுதுரை
	ஈ. வி. கே. சம்பத்
கமலா பாலசுந்தரம்	சுலோச்சனு சம்பத்

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ்,
404 திருவல்லிக்கேணிஹைரோடு, சென்னை-5 அலுவலகம் 1-35, வாணியர் தெரு. சென்னை-14.